**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-10022025-9544

Volume: 10

Issue: 2

Month: October

Year: 2025

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 02.09.2025

Accepted: 23.09.2025

Published: 01.10.2025

Citation:
Mujahid, A. (2025). Hospitality in Islam and Thirukkural: A Comparative Study. *Shanlax International Journal of Tamil Research*, 10(2), 69–78.

DOI:
https://doi.org/10.34293/tamil.v10i2.9544

*Corresponding Author:
mujahidm@esn.ac.lk

CC BY SA

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Hospitality in Islam and Thirukkural: A Comparative Study

**ALM. Mujahid**
*Senior Lecturer, Department of Islamic Studies*
*Eastern University, Sri Lanka*
*https://orcid.org/0000-0001-8562-1209*

**Abstract**

*Hospitality is a universal ethical principle valued across human societies, fostering respect, compassion, and social cohesion. Welcoming guests with care, providing food, and showing them honor are practices that strengthen human solidarity and social harmony, transcending geographical, religious, and cultural boundaries. In the Tamil tradition, the Tirukkural presents hospitality as a foundational aspect of domestic life. Thiruvalluvar emphasizes that households practicing hospitality exemplify true dignity and meaningful living, framing it as a moral virtue that enhances both individual and societal well-being. In Islamic tradition, hospitality carries both spiritual and social significance. It is considered a command of Allah and a demonstration of faith. The Qur'an and Hadith underscore its importance, with Prophet Muhammad (peace be upon him) stating, "Whoever believes in Allah and the Last Day should honor his guest," thereby establishing hospitality as a religious and ethical obligation. A comparative analysis reveals both traditions recognize hospitality as a means to nurture human values, social unity, and respect. However, while the Tirukkural emphasizes humanism and moral duty, Islam integrates spiritual accountability and divine obedience. Thus, hospitality emerges as a universal virtue that transcends culture and religion, linking human beings through shared ethical practice.*

***Keywords:*** *Hospitality, Thirukkural, Tamil Culture, Islam, Qur'an, Hadith, Comparative Study*

**References**

1. Al-Bukhari. (1997). Sahih al-Bukhari (M. Khan, Trans.). Dar-us-Salam.
2. Muslim, I. H. (2000). Sahih Muslim (A. Siddiqui, Trans.). Dar-us-Salam.
3. Qur'an. (2005). The Holy Qur'an (A. Yusuf Ali, Trans.). Islamic Book Trust.
4. Rahman, F. (1980). Major themes of the Qur'an. University of Chicago Press.
5. Subramanian, S. V. (2019). Ethical values in the Thirukkural. Journal of Tamil Studies, 104(2), 45–60.
6. Thiruvalluvar. (2008). Thirukkural (G. Pope, Trans.). Asian Educational Services.

# இஸ்லாம் மற்றும் திருக்குறளின் பார்வையில் விருந்தோம்பல் – ஓர் ஒப்பீட்டாய்வு

**அ. ஜெ. மு. முஜாஹித்**
இஸ்லாமிய கற்கைகள் துறை
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

**ஆய்வுச் சுருக்கம்**

*விருந்தோம்பல் என்பது மனித சமுதாயங்களில் அனைத்துத் தரப்பினராலும் மதிக்கப்பட்டு வரும் உயர்ந்த ஒழுக்க நெறியாகும். விருந்தினரை அன்போடு வரவேற்று உணவளித்தல், அவர்களுக்கு மரியாதை செய்தல் போன்றவை மனித ஒற்றுமையையும் சமூக நல்லுறவையும் வலுப்படுத்தும் முக்கிய அடிப்படைகளாகக் கருதப்பட்டுள்ளன. இந்நெறி, புவியியல் எல்லைகளையும், மத, மொழி, கலாச்சார வேறுபாடுகளையும் தாண்டி அனைத்து நாகரிகங்களிலும் காணப்படும் பொதுவான பண்பாக விளங்குகிறது. தமிழ் மரபில், திருக்குறள் விருந்தோம்பலை இல்லற வாழ்க்கையின் அடிப்படைத் தூணாகக் குறிப்பிடுகிறது. திருவள்ளுவர், விருந்தோம்பி வாழ்பவர் உலகம் தம்பின் நின்றோம்பிக் கொள்ளும் தொழில். எனக் கூறி, விருந்தோம்பல் செய்யும் இல்லற வாழ்க்கை மட்டுமே சிறப்புடையது என்பதை வலியுறுத்துகிறார். இதன் மூலம், விருந்தோம்பல் என்பது வெறும் சமூக மரபல்ல; அது இல்லற வாழ்க்கையின் அர்த்தத்தையும் உயர்வையும் காட்டும் நெறியாக விளங்குகிறது. இஸ்லாமிய மார்க்கத்தில் விருந்தோம்பல் என்பது வெறும் மனித மரியாதை அல்ல; அது அல்லாஹ்வின் கட்டளையும், நம்பிக்கையின் வெளிப்பாடுமாகும். அல்குர்ஆன் மற்றும் ஹதீஸ் இரண்டிலும் விருந்தோம்பலுக்குக் கொடுக்கப்பட்டுள்ள முக்கியத்துவம், இஸ்லாமிய வாழ்வியல் முறையில் இதன் மையப்பகுதியை வெளிப்படுத்துகிறது. நபி முஹம்மது (ஸல்) அவர்கள், யார் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்புகிறாரோ அவர் தம் விருந்தினரை கண்ணியப்படுத் தட்டும் எனக் கூறி, விருந்தோம்பலை ஆன்மீகப் பொறுப்பாக நிலைநிறுத்தியுள்ளார்கள். இக்கட்டுரை, திருக்குறளிலும் இஸ்லாத்திலும் விருந்தோம்பலின் நிலையை ஆராய்ந்து, அவற்றின் ஒற்றுமை மற்றும் வேறுபாடுகளை ஒப்பீட்டு நோக்கில் ஆராய்கிறது. திருக்குறள் விருந்தோம்பலை மனிதநேய அடிப்படையில் வலியுறுத்தினாலும், இஸ்லாம் அதனை ஆன்மீகப் பொறுப்பாகக் கருதுகிறது. இதன் மூலம், விருந்தோம்பல் என்பது மதத்தையும் கலாச்சாரத்தையும் தாண்டி மனித குலத்தை இணைக்கும் பொதுவான ஒழுக்க நெறியாக இருப்பது தெளிவாகிறது.*

***திறவுச் சொற்கள்:*** *விருந்தோம்பல், திருக்குறள், தமிழர் பண்பாடு, இஸ்லாம், குர்ஆன், ஹதீஸ், ஒப்பீட்டாய்வு*

## அறிமுகம்

விருந்தோம்பல் என்பது மனித சமூகத்தில் பரந்த பரிமாணங்களைக் கொண்ட நெறி ஆகும். விருந்தினரை அன்போடு வரவேற்று, உணவளித்து, மதிப்புடன் நடத்துவது மனிதர்களிடையே பரஸ்பர அன்பையும் ஒற்றுமையையும் வளர்க்கும் பண்பாகக் கருதப்படுகிறது. உலகின் பல்வேறு கலாச்சாரங்களிலும், காலத்தையும், சமூக சூழல்களையும் தாண்டி, விருந்தோம்பல் உயர்ந்த பண்பாக மதிக்கப்பட்டு வந்துள்ளது. சமூக ஒற்றுமையையும், பரஸ்பர மதிப்பையும் உருவாக்கும் அடிப்படைத் தூணாக விருந்தோம்பல் விளங்குகிறது.

தமிழர் பண்பாட்டில், விருந்தோம்பல் மரியாதைக்குரிய ஒழுக்கமாகக் கருதப்படுகிறது.

விருந்தோம்பல் இல்லாத வீடு வீடல்ல என்ற பழமொழி, இல்லற வாழ்க்கையின் அர்த்தத்தை வெளிப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், சமூகத்தில் மனிதர்களிடையே ஒற்றுமையை நிலைநிறுத்துவதிலும் விருந்தோம்பலின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது. திருக்குறள் விருந்தோம்பலை இல்லற வாழ்க்கையின் கடமையாக வலியுறுத்தி, அதை வாழ்க்கையின் சிறப்பாக உயர்த்திப் புகழ்கிறது. இதன்மூலம், தமிழர் பண்பாட்டில் விருந்தோம்பல் வெறும் சமூக வழக்கமாக அல்லாது, ஒரு வாழ்வியல் தத்துவமாகக் கருதப்பட்டிருப்பது தெளிவாகிறது.

இஸ்லாமிய பாரம்பரியத்திலும் விருந்தோம்பல் மிக முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. அல்குர்ஆன் மற்றும் ஹதீஸ் ஆகிய இஸ்லாமிய அடிப்படை ஆதாரங்களில் விருந்தோம்பல் உயர்ந்த நெறியாகவும், நம்பிக்கையின் வெளிப்பாடாகவும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. நபி முகம்மது (ஸல்) அவர்கள், யார் அல்லாஹ்வையும் இறுதிநாளையும் நம்புகிறாரோ அவர் தம் விருந்தினரை கண்ணியப்படுத்தட்டும் என்று வலியுறுத்தி, விருந்தோம்பலை ஆன்மீகப் பொறுப்பாகக் குறிப்பிட்டுள்ளார்கள். இஸ்லாத்தில் விருந்தோம்பல் வெறும் சமூக பழக்கம் அல்லாமல் அது அல்லாஹ்வின் கட்டளையாகக் கருதப்படும் ஒரு மார்க்கக் கடமையாக நோக்கப் படுகின்றது.

திருக்குறளும் இஸ்லாமும் விருந்தோம்பலை தனித்துவமான பார்வையில் விளக்குகின்றன. ஆனால், இவை இரண்டிலும் விருந்தோம்பல் ஒற்றுமையையும் அன்பையும் வளர்க்கும் நெறியாகக் கருதப்படுவதில் அடிப்படைச் சார்பு காணப்படுகிறது. இக்கட்டுரையின் நோக்கம், திருக்குறளும் இஸ்லாமும் விருந்தோம்பலை எவ்வாறு விளக்குகின்றன என்பதையும், அவற்றின் அடிப்படைத் தத்துவ வேறுபாடுகளையும், ஒற்றுமையையும் ஒப்பீட்டு நோக்கில் ஆராய்வதாகும்.

## இலக்கிய மீளாய்வு

### தமிழ் மரபில் விருந்தோம்பல் குறித்த ஆய்வுகள்

பல ஆய்வாளர்கள், சங்க இலக்கியங்களிலிருந்து தொடங்கி திருக்குறள் வரையிலும் விருந்தோம்பலின் முக்கியத்துவத்தை ஆராய்ந்துள்ளனர். சங்க இலக்கியங்கள், குறிப்பாக புறநானூறு மற்றும் சிறுபாணாற்றுப்படை விருந்தோம்பலை ஒரு சமூக மற்றும் அரசியல் உறவுகளையும் வலுப்படுத்தும் பண்பாகக் குறிப்பிடுகின்றன. இந்நூல்கள் விருந்தினரை மரியாதையாக வரவேற்றல், அவர்களுக்கு உணவளித்தல், மற்றும் மனித உறவுகளை வலுப்படுத்துதல் ஆகியவற்றின் சமூக மற்றும் பண்பாட்டு பங்களிப்புகளை விளக்குகின்றன (Subramanian, 2019).

திருக்குறளில், விருந்தோம்பல் இல்லற வாழ்க்கையின் அடிப்படைத் தூண் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. Subramanian (2019) கூறுவதுபோல், விருந்தோம்பல் இல்லற நெறியின் அடிப்படைத் தூண் என்பதில், விருந்தோம்பல் என்பது வெறும் சமூக மரபல்ல; அது இல்லற வாழ்க்கையின் தரத்தை உயர்த்தும் பண்பாகவும், குடும்பத்துடனான உறவுகளை வலுப்படுத்தும் நெறியாகவும் விளங்குகிறது. திருவள்ளுவர், குறிப்பாக 81-90 குறள்களில் விருந்தோம்பலின் அடையாளங்களை எடுத்துரைக்கிறார். இதனால், விருந்தோம்பல் தமிழர் சமூகத்தில் மனிதநேயத்தின் அடிப்படையான பண்பாகும் என்பது தெளிவாகிறது. மேலும், சில சமீபத்திய ஆய்வுகள் விருந்தோம்பலைச் சமூக ஒற்றுமை மற்றும் கலாச்சாரத் தொடர்ச்சியை வலுப்படுத்தும் முக்கிய கருவியாகக் காண்கின்றன. இது, தனி நபர் மட்டுமல்ல, சமூகத் தரப்பிலும் விருந்தோம்பலின் பயன்களை விளக்குகிறது. இதன் அடிப்படையில், தமிழ் இலக்கியங்கள் விருந்தோம்பலை சமூகத்திற்கான முக்கிய கொள்கையாகப் பார்க்கின்றன.

**இஸ்லாத்தில் விருந்தோம்பல் குறித்த ஆய்வுகள்**

இஸ்லாமிய மார்க்கத்தில் விருந்தோம்பல் உயர்ந்த ஆன்மிகக் கடமையாகவும், நம்பிக்கையின் வெளிப்பாடாகவும் கருதப்படுகிறது. இது தனிப்பட்ட பழக்கவழக்கம் அல்லது சமூக மரபாக மட்டுமல்ல, பக்தி, ஒற்றுமை மற்றும் சமூக நலன் ஆகியவற்றை இணைக்கும் மையப் பண்பாகும். இத்தகைய பார்வை, இஸ்லாமிய வாழ்வியல் முறையில் விருந்தோம்பலின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகிறது.

Fazlur Rahman (1980) uÚx Major Themes of the Qur'an நூலில், விருந்தோம்பல் இஸ்லாமிய சமுதாயத்தின் ஒற்றுமை மற்றும் பரஸ்பர அன்பின் அடையாளமாகும் என்று வலியுறுத்துகிறார். அவர் குறிப்பது போல், விருந்தோம்பல் தனிப்பட்ட கடமையோ, சமூக மரபோ என்ற அளவில் மட்டுமின்றி, அது சமுதாய உறவுகளைக் கூர்ந்து இணைக்கும், நன்மை மற்றும் ஒற்றுமையை உருவாக்கும் ஒரு செயல் ஆகும். விருந்தோம்பல் சமூக அமைப்பின் ஒழுங்கையும், குடும்பத்தாரிடையேயான அன்பையும் வலுப்படுத்தும் பண்பாக அமைகிறது.

பல ஹதீஸ் ஆய்வுகள் மற்றும் சான்றுகள் (Al & Bukhari, 1997; Muslim, 2000) விருந்தோம்பலின் ஆன்மிகத் தத்துவத்தையும் விளக்குகின்றன. குறிப்பாக நபி முஹம்மது (ஸல்) அவர்கள் கூறிய ஹதீஸ்கள் விருந்தோம்பலை நம்பிக்கையின் வெளிப்பாடு என்றும், கடமையாகக் கருத வேண்டிய செயல்களாகவும் விளக்குகின்றன. ஹதீஸ்களில் குறிப்பிடப்படுவது போல, யார் அல்லாஹ்வையும் இறுதிநாளையும் நம்புகிறாரோ அவர் தம் விருந்தினரை கண்ணியப்படுத்தட்டும் (Al & Bukhari, 1997, íwì Gs 6135), என்ற ஹதீஸ் இதனை ஓர் அடிப்படையான நம்பிக்கையோடு இணைத்துப் பேசுகிறது. இதன் மூலம், விருந்தோம்பல் பக்தி மற்றும் நம்பிக்கையின் அடையாளமாகவும், மனித ஒற்றுமை மற்றும் சமூக நலனுக்கான கருவியாகவும் விளங்குகிறது.

ஹதீஸ்கள் விருந்தோம்பலின் கால அளவைச் சுட்டிக்காட்டுகின்றன. விருந்தினரை வரவேற்று, அவர்களுக்கு உணவளித்து, மதிப்பளித்து நடத்தல் மூன்று நாட்கள் கடமை என வலியுறுத்தப்படுகிறது; அதற்கு மேல் செய்யப்படும் விருந்தோம்பல் சதகா எனக் கருதப்படுகிறது (Muslim, 2000, Hadith No. 48b). இதன்மூலம், விருந்தோம்பல் வெறும் சமூக வழக்கம் அல்ல, அது ஆன்மிகப் பண்பும், கடமையும், மறுமை நாளில் பெறும் பலன்களுடன் இணைந்த ஓர் உயர்ந்த செயலும் ஆகும் என்பது இஸ்லாத்தின் பார்வையாகும்.

இஸ்லாமிய ஆய்வுகள் மேலும் விருந்தோம்பல் மனித நெறிகளுடன் இணைந்து செயல்படுவதாகவும் குறிப்பிடுகின்றன. விருந்தோம்பல் செய்யும் வீடு சமுதாயத்தில் மதிப்புக்குரியதாகவும், குடும்ப உறவுகளையும் சமூக உறவுகளையும் வலுப்படுத்தும் கருவியாகவும் கருதப் படுகிறது. விருந்தோம்பல் இஸ்லாமிய சமூகத்தில் நேர்மையான பண்பு மட்டுமல்ல; ஆன்மிக நோக்கங்களுடன் கூடிய, சமூக நலனையும் பரப்பும் உயர்ந்த ஒழுக்கமாக விளங்குகிறது. இஸ்லாமிய மரபில் விருந்தோம்பல் என்பது வெறும் சமூக மரபோ அல்லது குடும்ப பழக்கவழக்கமோ அல்ல; அது அல்லாஹ்வின் கட்டளை, நம்பிக்கையின் வெளிப்பாடு மற்றும் சமூக ஒற்றுமை ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் ஆன்மிகக் கடமை ஆகும். விருந்தோம்பல் மனிதநேயம் மற்றும் சமூக நன்மையை ஊக்குவிப்பதோடு, மறுமை நாளில் இறைவனிடத்தில் பெருமை மற்றும் பலன்களை அளிக்கும் பண்பாக அமைகிறது.

**ஆய்வு முறையியல்**

இக்கட்டுரை ஒரு ஒப்பீட்டாய்வு ஆய்வாக வடிவமைக்கப் பட்டுள்ளது. ஆய்வின் நோக்கம், திருக்குறள் மற்றும் இஸ்லாமிய மரபுகளில் விருந்தோம்பலின் கருத்துகள் மற்றும் நடைமுறை அம்சங்களை ஒப்பிட்டு ஆராய்வது ஆகும். ஆய்வில் முதன்மையாக ஆவண அடிப்படை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதில் திருக்குறள் (81-90 அதிகாரங்கள்) மற்றும் இஸ்லாமிய ஆதாரங்கள் (குர்ஆன் மற்றும் ஹதீஸ்) ஆகிய இலக்கியங்களில் விருந்தோம்பலுக்கான பகுதிகள் கவனிக்கப்பட்டன. இதன் மூலம், ஒவ்வொரு மரபிலும் விருந்தோம்பலின் விளக்கம், அர்த்தம் மற்றும் நடைமுறை அம்சங்களை வெளிப்படுத்த முடிந்தது.

இரண்டாம் தர மூலாதாரங்களும் பயன்படுத்தப்பட்டன. இதில் தமிழ் இலக்கிய ஆய்வுகள், திருக்குறள் குறித்த ஆய்வுக் கட்டுரைகள், இஸ்லாமிய நெறியியல் நூல்கள் மற்றும் ஹதீஸ் ஆய்வுகள் ஆகியவை அடங்குகின்றன. சமீபத்திய கல்வியியல் கட்டுரைகள் மற்றும் ஆய்வுகள் மூலம் சமூக மற்றும் பண்பாட்டு பங்களிப்புகளை சீரான முறையில் எடுத்துரைக்க உதவியது. ஆய்வின் பகுப்பாய்வு முறை கருத்து அடிப்படையிலானபகுப்பாய்வு) முறையை பின்பற்றியது. இதன் மூலம் விருந்தோம்பலின் ஒற்றுமைகள் மற்றும் வேறுபாடுகள் அடையாளம் காணப்பட்டு ஒப்பீட்டு முறையில் விவாதிக்கப்பட்டன. மேலும், விருந்தோம்பல் மனித வாழ்வு, இல்லற அமைப்பு மற்றும் ஆன்மீக செயல் பாடுகளுக்கு ஏற்ப ஏற்படும் பங்களிப்புகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**திருக்குறளில் விருந்தோம்பல்**

திருக்குறளில் விருந்தோம்பல் என்பது இல்லற வாழ்க்கையின் அடிப்படைத் தூணாகவும், சமூக ஒற்றுமை மற்றும் மனிதநேயத்தின் வெளிப்பாடாகவும் விளக்கப்பட்டுள்ளது. திருவள்ளுவர், இல்லறத்தின் சிறப்பையும் வாழ்க்கையின் உயர்வையும் விருந்தோம்பல் மூலம் அடைய முடியும் என வலியுறுத்துகிறார். திருக்குறளில் விருந்தோம்பலைப் பற்றிய குறள்கள் 81-90 அதிகாரங்களில் விரிவாக பேசப்பட்டுள்ளன.

**1. விருந்தோம்பலின் அவசியம்**

திருக்குறளில் விருந்தோம்பல் செய்யும் முக்கியத்துவம் பின்வருமாறு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது:

**இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு**

இந்தக் குறள், விருந்தோம்பல் இல்லற வாழ்க்கையின் மையப் பண்பாக இருப்பதை வெளிப்படுத்துகிறது. வீட்டு நல்வாழ்க்கை, வளமான வாழ்க்கை, குடும்ப உறவுகள் விருந்தோம்பல் மூலம் சிறப்பாக அமையும் என குறள் கூறுகிறது. விருந்தோம்பல் செய்யும் இல்லம், இல்லற வாழ்வின் பெருமைக்குரிய வீடு என்று கருதப்படுகிறது. திருவள்ளுவர் விருந்தோம்பலை மனித வாழ்வின் அத்தியாவசிய பண்பு என்றும் குறிப்பிடுகிறார். விருந்தோம்பல் இல்லாத வீடு, வாழ்வின் அர்த்தத்தை இழக்கிறது என்பதே குறளின் முக்கிய செய்தியாகும். இது ஒற்றுமை, அன்பு, மரியாதை ஆகிய பண்புகளுடன் நேரடியாக தொடர்புடையது.

**2. விருந்தினரைப் போற்றாதது குற்றம்**

திருக்குறளில், விருந்தினரை மரியாதையுடன் வரவேற்காமல்விட்டுவிடுவதுசமூகமற்றும்இல்லற ஒழுக்கத்துக்கு எதிரானது எனக் கூறப்படுகிறது:

**வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை**
**பருவந்து பாழ்படுதல் இன்று.**

இந்தக் குறள், விருந்தோம்பலை மற்ற இல்லற நெறிகளுடன் இணைக்கிறது. விருந்தினரை மரியாதையுடன் வரவேற்றல்

இல்லாத வீடு, இல்லற அமைப்பில் குற்றமாய் கருதப்படுகிறது. மேலும், வீடு மக்கள் வாழும் சமூகத்தின் ஒரு பிரதிபலிப்பு என நினைத்தால், விருந்தோம்பல் இல்லாத வீடு சமூக மற்றும் இல்லற ஒழுக்கத்திற்கும் கேடு விளைவிக்கும் என்பதும் தெளிவாகிறது.

### 3. விருந்தோம்பலின் சமூக மற்றும் மனநிலை விளைவுகள்

திருக்குறளில் விருந்தோம்பல் செய்யும் நன்மைகள் பலவாக விவரிக்கப்படுகின்றன:

1. மனிதநேய வளர்ச்சி: விருந்தோம்பல், மற்றவர்களுக்கு அன்பு, கருணை மற்றும் மரியாதையை வளர்க்கும் வழியாகும்.
2. சமூக ஒற்றுமை: விருந்தோம்பல் குடும்பத்தினரையும், சமூகத்தினரையும் இணைக்கும் செயலாக இருக்கிறது.
3. இல்லற வாழ்க்கை உயர்வு: விருந்தோம்பல் இல்லற வாழ்வின் தரத்தை உயர்த்துகிறது. வீடு வாழும் மக்களுக்கு மன அமைதி மற்றும் ஒருங்கிணைந்த வாழ்வை வழங்குகிறது.
4. சமூக மரபின் பரம்பரை: விருந்தோம்பல் பழக்கம் இனப்பெருமையும், சமூக மரபையும் பரம்பரைப் பரவவைக்கும் வழியாக அமைகிறது.

திருக்குறள் விருந்தோம்பலை வெறும் உணவளிப்பும் வரவேற்பும் அல்ல; மனச் சோர்வு, மரியாதை, நேர்மை மற்றும் சமூகப் பொறுப்பு ஆகியவற்றுடன் இணைக்கிறது. விருந்தோம்பல் இல்லாத வீடு, மனித வாழ்வின் உயர்வு, இல்லற ஒழுக்கம் மற்றும் சமூக நெறியை இழக்கும் என திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். மேலும், விருந்தோம்பல் செய்யும் குடும்பம், குடும்ப உறவுகளின் வலிமையும், சமூக நலமும் உயர்த்தப்படும் எனவும் குறள் வலியுறுத்து கிறது. இதன் மூலம், விருந்தோம்பல் இல்லற வாழ்வின் உயர்ந்த பண்பாக மட்டுமல்ல, மனித வாழ்வின் உண் மையான அர்த்தத்தையும் வெளிப்படுத்தும் என்பதை உணர்த்துகிறது. திருக்குறளின் குறள்கள், விருந்தோம்பலை முக்கிய சமூக மற்றும் இல்லற பண்பாக வெளிப்படுத்து கின்றன. இவை, சமூக ஒற்றுமை, அன்பு, மரியாதை, இல்லற அமைதி ஆகியவற்றை ஒருங்கிணைக்கின்றன. இந்நியாயத்திற் கேற்ப, தமிழ் சமூகத்தில் விருந்தோம்பல் மனித வாழ்வின் அடிப்படைத் தூண் எனக் கருதப்படுகிறது.

## இஸ்லாத்தில் விருந்தோம்பல்

இஸ்லாமிய மார்க்கத்தில் விருந்தோம்பல் ஓர் உயர்ந்த பண்பாகவும், அல்லாஹ்வின் கட்டளையாகவும் கருதப்படுகிறது. இது சமூக ஒற்றுமையை வளர்க்கும், நம்பிக்கையின் வெளிப்பாடாக செயல்படும் முக்கிய நெறியாகும். விருந்தோம்பல் இஸ்லாமிய வாழ்வியல் முறையில் தனிப்பட்ட கடமையல்ல; அது சமூகத்திற்கான நன்மையும், ஆன்மீக பலன்களையும் வழங்கும் பண்பாகவும் விளங்குகிறது.

### 1. குர்ஆனில் விருந்தோம்பல்

குர்ஆன் பல இடங்களில் விருந்தோம்பலின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கிறது. குறிப்பாக, இப்றாஹீம் (அலை) அவர்களது விருந்தோம்பல் பற்றி அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது. எனினும் அவர் தம் குடும்பத்தாரிடம் விரைந்து சென்று, ஒரு கொழுத்த காளைக் கன்றைப் பொறித்துக் கொண்டு வந்தார். (குர்ஆன், 51:26) இந்த வசனம், விருந்தினரை வரவேற்று உணவளிப்பதில் விரைந்து நடப்பது கடமை மற்றும் அன்பின் அடையாளமாகும் என்பதை விளக்குகிறது. இஸ்லாமிய மார்க்கத்தில், விருந்தோம்பல் செய்யும் செயல் நேர்மையையும், மனப்பான்மையையும் வெளிப்படுத்தும் வழியாக கருதப்படுகிறது. இது, வீட்டு வாழ்விலும் சமூக உறவுகளிலும் நன்மை உண்டாக்கும் பண்பாக விளங்குகிறது.

மேலும், குர்ஆன் விருந்தோம்பலைச் சமூக ஒற்றுமையை வலுப்படுத்தும் கருவியாகக் காட்டுகிறது. இது குடும்பத்தாரின் வாழ்விலும், விசேடமாக விருந்தினரின் சமூகத்தை இணைப்பதிலும் முக்கிய பங்களிப்பை வழங்குகிறது.

### 2. ஹதீஸ்களில் விருந்தோம்பல்

ஹதீஸ்களில், நபி முகம்மது (ஸல்) அவர்கள் விருந்தோம்பலை நம்பிக்கையின் அடையாளமாகக் குறிப்பிட்டுள்ளார்கள். யார் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்புகிறாரோ அவர் தம் விருந்தினரைக் கண்ணியப்படுத்தட்டும் (அல்-புகாரி, 1997, ஹதீஸ் எண் 6135). இந்த ஹதீஸ், விருந்தோம்பலை ஓர் ஆன்மிகக் கடமையாக வலியுறுத்துகிறது. அதாவது, விருந்தினரை மரியாதையுடன் வரவேற்றல், உணவளித்தல், அவர்களுக்கு உடன்பாடு காட்டுதல் ஒரு நம்பிக்கையாளரின் கடமையாகும்.

ஹதீஸ்களின் கருத்துப்படி விருந்தோம்பல் மூன்று நாட்கள் கடமையாகக் கருதப்படுகிறது. அந்தக் காலம் முழுவதும் விருந்தினரை விரும்பத்தக்க முறையில் நடத்துதல் அவசியமாகும்; அதற்கு மேல் செய்யப்படும் விருந்தோம்பல் தானமாக கருதப்படுகிறது (Muslim, 2000). இது, விருந்தோம்பலின் சமூக நோக்கம் மட்டுமல்ல, அதற்குப் பிறகு அதன் ஆன்மிக பலனையும் வெளிப்படுத்துகிறது.

### 3. சமூக மற்றும் ஆன்மிக முக்கியத்துவம்

இஸ்லாத்தில் விருந்தோம்பலின் நன்மைகள் பல குறிப்பிடப்பட்டுள்ளன:

1. ஆன்மிக பலன்: விருந்தோம்பல் செய்யும் நபருக்கு அல்லாஹ்விடத்தில் நன்மை கிடைக்கும்.
2. நம்பிக்கையின் வெளிப்பாடு: இது நம்பிக்கையாளராக உள்ளதைச் சான்றளிக்கும் ஒரு செயலாகும்.
3. சமூக ஒற்றுமை: விருந்தோம்பல் மூலம் குடும்பத்தார் மட்டுமல்ல, சமூகத்தாருடனான உறவுகள் வலுப்பெறுகின்றன.
4. சமூக நல்லுறை: விருந்தோம்பல் செய்யும் வீடு சமுதாயத்தில் மதிப்புக்குரியதாகக் கருதப்படுகிறது.

இவ்வாறு, இஸ்லாமிய வாழ்வியல் முறையில் விருந்தோம்பல் என்பது வெறும் மரபு அல்லது பழக்கம் அல்ல; அது ஆன்மிகம், நம்பிக்கை, சமூக உறவு மற்றும் நல்லுறவு ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் உயர்ந்த பண்பாக அமைகிறது.

## திருக்குறள் மற்றும் இஸ்லாத்தில் விருந்தோம்பல் ஒப்பீடு

திருக்குறளிலும் இஸ்லாத்திலும் விருந்தோம்பல் உயர்ந்த பண்பாகவும், இல்லற வாழ்வியல் மற்றும் சமூக ஒற்றுமையின் அடையாளமாகவும் கருதப் படுகிறது. ஆனால், இரண்டு மரபுகளிலும் விருந்தோம்பலுக்குக் கொடுக்கப்பட்ட மூல நோக்கங்கள் மற்றும் செயல்முறை வேறுபாடுகளை காணலாம்.

### 1. ஒற்றுமைகள்

### 1. இல்லற வாழ்க்கையின் அடையாளம்

திருக்குறளிலும், விருந்தோம்பல் இல்லற வாழ்க்கையின் சிறப்பை உயர்த்தும் பண்பாக கருதப்படுகிறது (திருக்குறள் 84, 85). இஸ்லாத்திலும், விருந்தோம்பல் ஒரு குடும்பத்தின் உயர்வுக்கும் சமூக மதிப்புக்கும் அடையாளமாக இருக்கிறது (Al&Bukhari, 1997; Muslim, 2000).

### 2. மனித ஒற்றுமை மற்றும் சமூக ஒழுங்கை உறுதிப்படுத்துதல்

இரு மரபுகளிலும், விருந்தோம்பல் சமூக உறவுகளை வலுப்படுத்துவதிலும், பரஸ்பர அன்பையும் இணக்கத்தையும் உருவாக்குவதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. திருக்குறளில் விருந்தோம்பல் செய்யும் வீடு

மனித வாழ்வின் அர்த்தத்தை வளர்க்கும் வகையில் பார்க்கப்படுகிறது; இஸ்லாத்தில் விருந்தோம்பல் சமூக ஒற்றுமையை மற்றும் நல்லுறவை ஊக்குவிக்கும் ஒரு ஆன்மிகப் பண்பாகும்.

### 3. மரியாதை மற்றும் அன்பு

இரு மரபுகளிலும் விருந்தோம்பல் மரியாதை மற்றும் அன்பின் வெளிப்பாடாக கருதப்படுகிறது. விருந்தினரை வரவேற்றல், அவர்களுக்கு உணவு வழங்குதல், பரிசளித்தல் போன்ற செயல்கள் பொதுவான பண்பாக இருப்பதாக இரண்டும் ஒப்புக் கொள்கின்றன.

### 2. வேறுபாடுகள்

### 1. திருக்குறள்

திருக்குறளில் விருந்தோம்பல் மனித நேயம், இல்லற நெறி, மற்றும் சமூக ஒழுக்கத் தின் அடிப்படை எனக் கருதப்படுகிறது. விருந்தோம்பல் செய்யாத வீடு மனித வாழ்வின் அர்த்தத்தை இழக்கின்றது என்பதே திருவள்ளுவரின் நோக்காகும். இதன் மூலம், விருந்தோம்பல் ஒரு நெறிமுறையான பண்பு மற்றும் மனிதநேயம் ஆகும்; அதில் ஆன்மிக கட்டளையோ, கடமையோ வலியுறுத்தப்படவில்லை.

### 2. இஸ்லாம்

இஸ்லாத்தில் விருந்தோம்பல் அல்லாஹ்வின் கட்டளை, நம்பிக்கையின் வெளிப்பாடு, மற்றும் மறுமை நாளின் பலனுடன் இணைக்கப்பட்டு விளக்கப்படுகிறது. இதன் மூலம், விருந்தோம்பல் ஆன்மிகப் பொறுப்பு, நம்பிக்கையின் சான்று, மற்றும் நன்மைக்கான கருவியாகக் கொள்ளப் படுகின்றது.

### கண்டுபிடிப்புக்களும் கலந்துரையாடலும்

திருக்குறளிலும் இஸ்லாமிலும் விருந்தோம்பல் உயர்ந்த பண்பாகக் கருதப்படுகிறது, ஆனால் அவற்றின் அடிப்படை நோக்கு மற்றும் விளக்கவியல் வெவ்வேறு கோணங்களில் அமைகிறது.

### 1. திருக்குறள்: மனிதநேய அடிப்படை

திருக்குறளில், விருந்தோம்பல் மனிதநேயத்தின் அடிப்படையில் விளக்கப்பட்டுள்ளது. திருவள்ளுவர், இல்லற வாழ்க்கையின் சிறப்பை, சமூக ஒற்றுமையை, மற்றும் குடும்ப வாழ்வின் தரத்தை விருந்தோம்பல் மூலம் உயர்த்த முடியும் என வலியுறுத்து கிறார். அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து நல்விருந்து ஓம்புவான் இல். (திருக்குறள், 84) என்ற குறள், விருந்தோம்பல் இல்லற வாழ்க்கையின் அடிப்படைத் தூண் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. திருக்குறளில் விருந்தோம்பல் செய்யாத வீடு, மனித வாழ்வின் அர்த்தத்தையும், இல்லற அமைப்பின் சிறப்பையும் இழக்கும் என குறிப்பிடப்படுகிறது. இதன் மூலம், திருக்குறள் விருந்தோம்பலை ஆன்மிகப் பொறுப்பு இல்லாமல் மனிதநேயம், நேர்மை, அன்பு, மரியாதை மற்றும் சமூக ஒற்றுமை போன்ற பண்புகளுடன் இணைக்கிறது. விருந்தோம்பல் செய்யும் செயல்கள் மனிதர்களிடையே அன்பையும், பரஸ்பர மதிப்பையும் வலுப்படுத்தும் சமூக நெறியாக கருதப்படுகின்றன.

### 2. இஸ்லாம்: ஆன்மிக அடிப்படை

மறுபுறம், இஸ்லாத்தில் விருந்தோம்பல் ஒரு ஆன்மிகப் பண்பாக விளக்கப்படுகிறது. ஹதீஸ் மற்றும் குர்ஆன் குறிப்புகள் விருந்தோம்பலை அல்லாஹ்வின் கட்டளை எனவும், நம்பிக்கையின் வெளிப்பாடாகவும் எடுத்துரைக்கின்றன. நபி முகம்மது (ஸல்) கூறிய ஹதீஸ்: யார் அல்லாஹ்வையும் இறுதிநாளையும் நம்புகிறாரோ அவர் தம் விருந்தினரை கண்ணியப்படுத் தட்டும் (அல்-புகாரி, 1997, ஹதீஸ் எண்

*6135),* என்று கூறியிருப்பதால் அது விருந்தோம்பலை ஆன்மிகக் கடமையாக நிலைநிறுத்துகிறது. இஸ்லாத்தில், விருந்தோம்பல் மூன்று நாட்கள் கடமை எனவும், அதற்கு மேல் செய்யப்படும் விருந்தோம்பல் தானமாக கருதப்படுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது (Muslim, 2000). இதனால், இஸ்லாம் விருந்தோம்பலை மனிதநேயம் மட்டுமல்ல, ஆன்மிக கடமை, நம்பிக்கையின் சான்று மற்றும் இறைவனிடத்தில் பலனுக்கான வழி எனக் கருதுகிறது.

### 3. ஒற்றுமை மற்றும் தொடர்புகள்

இரு மரபுகளும் விருந்தோம்பலை மனிதகுலத்தை இணைக்கும் ஒரு பொது வான நெறியாக விளக்குகின்றன.

1. மனித உறவுகள் மற்றும் சமூக ஒற்றுமை: இரு மரபுகளும் விருந்தோம்பல் மனிதர்களிடையே அன்பையும், மரியாதையையும் வளர்க்கும் விதமாக அமைந்துள்ளது.
2. இல்லற வாழ்க்கையின் சிறப்பு: திருக்குறளில் விருந்தோம்பல் இல்லற வாழ்வின் உயர்வுக்கான அடிப்படையாக உள்ளது; இஸ்லாத்திலும், விருந்தோம்பல் குடும்பத்தின் மரியாதையும் சமூக நலனையும் வளர்க்கிறது.
3. பன்முக நன்மைகள்: இரு மரபுகளும் விருந்தோம்பலை சமூக நலன், இல்லற ஒழுக்கம், மனிதநேயம் ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் பண்பாக கருதுகின்றன.

இதில் வேறுபாடு இருப்பது, திருக்குறள் விருந்தோம்பலை மனிதநேய, சமூக ஒழுக்கம் மற்றும் இல்லற நெறியின் அடிப்படையில் விளக்குவது; இஸ்லாம் விருந்தோம்பலை அல்லாஹ்வின் கட்டளை மற்றும் ஆன்மிகக் கடமையாக விளக்குவதில் உள்ளது.

இரு மரபுகளும் விருந்தோம்பலை மனித வாழ்வின்உயர்விற்கும், சமூகஒற்றுமைக்கும் முக்கியகருவியாககருதுகின்றன.திருக்குறள், விருந்தோம்பலை நெறி மற்றும் மனிதநேய மையமாக அமைத்திருக்க, இஸ்லாம், விருந்தோம்பலை ஆன்மிகக் கடமையாகவும், நம்பிக்கையின் வெளிப்பாடாகவும் நிலை நிறுத்துகிறது. இதன் மூலம், விருந்தோம்பல் ஒரு மொழி, மதம் மற்றும் கலாச்சார எல்லைகளை தாண்டி மனிதர்களை இணைக்கும் பொதுவான பண்பாக விளங்குகிறது.

### முடிவுரை

திருக்குறளில், விருந்தோம்பல் மனித நேயம், மரியாதை, அன்பு ஆகியவற்றின் அடிப்படையில் இல்லற வாழ்வின் முக்கிய தூணாகக் கருதப்படுகிறது. திருவள்ளுவர் விருந்தோம்பலை மனித வாழ்வின் அர்த்தம், இல்லற அமைதி மற்றும் சமூக ஒற்றுமைக்கு வழிவகுக்கும் நெறியாக வலியுறுத்து கிறார். இதில் ஆன்மிகக் கடமை எனும் அம்சம் காணப்படாமல், மனிதநேயம் மற்றும் சமூக நல்லுறவு முக்கியமாகக் கொள்ளப்படுகின்றன.

மாறாக, இஸ்லாத்தில் விருந்தோம்பல் அல்லாஹ்வின் கட்டளை மற்றும் நம்பிக்கையின் வெளிப்பாடாகக் கருதப்படுகிறது. குர்ஆன் மற்றும் ஹதீஸ்கள் விருந்தோம்பலை ஆன்மிகப் பண்பு, மறுமை நாளின் பலன் மற்றும் இறைவனிடத்தில் பெருமை ஆகியவற்றோடு இணைத்துக் கூறுகின்றன. ஹதீஸ்களின் அடிப்படையில், விருந்தோம்பல் மூன்று நாட்கள் வரை கடமையாகவும் அதற்கு மேல் செய்யப் படுவது சதகா எனவும் விளக்கப்படுகிறது.

ஒப்பீட்டுப் பார்வையில், இரு மரபுகளும் விருந்தோம்பலை இல்லற வாழ்வின் அடையாளம், மனிதநேயம், அன்பு மற்றும் சமூக ஒற்றுமையை வலுப்படுத்தும் பண்பாகக் காண்கின்றன. எனினும், திருக்குறள் விருந்தோம்பலை மனிதநேயம் மற்றும் சமூக நெறியாக விளக்குகின்றது; இஸ்லாம் அதனை ஆன்மிகக் கடமை,

இறைவனின் கட்டளை மற்றும் மறுமை நாளின் பலனுடன் இணைக்கிறது. இதன் மூலம், விருந்தோம்பல் மொழி, மதம், கலாச்சாரம் ஆகிய எல்லைகளைத் தாண்டி மனிதர்களை ஒன்றிணைக்கும் பொதுவான பண்பாகத் திகழ்கிறது என்பதை இவ்வாய்வு தெளிவுபடுத்துகிறது. இரு மரபுகளும் விருந்தோம்பலை மனித வாழ்வின் உயர்வு மற்றும் சமூக நலனுக்கான கருவியாகக் கருதினாலும், அவற்றின் நோக்கும் அடிப்படையும் வெவ்வேறு கோணங்களில் வெளிப்படுகின்றன. எனவே, திருக்குறள் மற்றும் இஸ்லாமின் பார்வையில் விருந்தோம்பல், மனிதநேயம், சமூக ஒற்றுமை மற்றும் ஆன்மிகக் கடமைகள் ஆகியவற்றோடு இணைந்துகொண்ட ஒரு பொதுவான மனிதப்பண்பாக விளங்குகிறது என்பதே இவ்வாய்வின் முக்கிய முடிவாகும்.